பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 24 வெள்ளிக்கிழமை 13.12.2024 | அதிர்வு 134

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைக் கிராமமான வடமுனை – ஊத்துச்சேனையில் குடும்பத் தகராறில் ஒருவர் கோடரியால் வெட்டிப் படுகொலை 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### சர்ச்சைக்குரிய ‘கலாநிதி’ பட்டம்:

# எதிர்ப்புக்களையடுத்து சபாநாயகர் இராஜிநாமா!



சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல தனது பதவியை இன்று மாலை இராஜிநாமா செய்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

“கடந்த சில நாட்களாக எனது கல்வித் தகுதி குறித்த பிரச்சினை சமூகத்தில் எழுந்துள்ளது. எனது கல்வித் தகுதி குறித்து நான் இதுவரை எவ்வித பொய்யான அறிவிப்புக்களையும் விடுக்கவில்லை.

ஆனால், கல்வித் தகுதியை உறுதிப்படுத்தத் தேவையான சில ஆவணங்கள் என்னிடம் இல்லாததாலும், அவற்றை உரிய நிறுவனங்களிடம் பெற வேண்டியதாலும், தற்போது அந்த ஆவணங்களை 04

# எந்தத் தரத்தில் இருப்பவராயினும் தவறு செய்திருந்தால் நடவடிக்கை

## ஜனாதிபதி அநுர திட்டவட்டம்



**“மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை எந்த வகையிலும் பழுதடைவதற்கு இடமளியோம். எமது அரசின் எந்தப் பொறுப்பை வகிப்பவர் தவறு செய்திருந்தாலும் நாம் நடவடிக்கை எடுப்போம்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**அரச ஊடக பிரதானிகளுடன் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.**

**அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,**

**“ஏழு தசாப்தங்களுக்கும்** 04

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதிகாரிகளுடன் தர்க்கம் புரிந்த அர்ச்சுனா எம்.பி.



அரச அதிகாரிகளின் கல்வித் தகைமைகளைக் கேள்விக்கு உட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா செயற்பட்டமையால் , அரச அதிகாரிகள் தமது கண்டனங்களை யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பதிவு செய்தனர்.

யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 04



# யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்!

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்ட தாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இன்று வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

“நாங்கள் பட்டப் படிப்பை நிறைவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்ற போதிலும் அரச வேலை வாய்ப்பு தமக்கு இதுவரை வழங்கப் படவில்லை. எனவே, புதிதாக ஆட்சி அமைத்திருக்கும் அரசு எங்களுக்கான அரச நியமனத்தை வழங்க வேண்டும்.” – என்று வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் பலர் கலந்து கொண்டனர்.






















# அநுர இப்போது ‘கோட்டா - பகுதி 2’ ஆகிவிட்டாரா?

## சஜித் அணி கேள்வி

“முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போன்று பொம்மை பட்டதாரி அமைச்சர்கள் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசிலும் உள்ளனர். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க “கோட்டாபய பகுதி – 2” ஆக மாறிவிட்டாரா?.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

“உண்மையில் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக்கொள்ளாமல், கலாநிதி என்று தன்னைத்தானே கூறிக்கொண்டு சபாநாயகர் மக்களை ஏமாற்றியிருக்கின்றாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த அவமரியாதையைப் போக்கிக் கொள்வதற்கு இனியும் தாமதிக்காமல் உண்மையை வெளிப்படுத்துமாறு சபாநாயகரை வலியுறுத்துகின்றோம். சபாநாயகருக்கு ஏற்படும் அவமானம் நாடாளுமன்றத்துக்கு ஏற்படும் அவமானமாகும்.

சபாநாயகர் மீது மாத்திரமின்றி மேலும் சில அமைச்சர்களது பட்டங்கள் தொடர்பிலும் தற்போது தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போன்று பொம்மை பட்டதாரி அமைச்சர்களாக தேசிய மக்கள் சக்தி அரசிலும் உள்ளனர். மக்களின் பாரிய ஆணையைப் பெற்றுள்ள கட்சி என்ற ரீதியில் நாட்டுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு ஜே.வி.பிக்கு – தேசிய மக்கள் சக்திக்கு உண்டு.

அதேபோன்று சபாநாயகர் பொய் கூறுகின்றார் என்றால் உடனடியாக அவர் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம். அன்று கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டபோது, எதிர்க்கட்சி எம்.பியாக அநுரகுமார திஸாநாயக்க கடும் கண்டனங்களை முன்வைத்தார். ஆனால், இன்று அவரது ஆட்சியில் அதே பிரச்சினை ஏற்பட்டுள்ளபோது அவரால் தீர்வை வழங்க முடியாமலிருக்கின்றது. அநுர இப்போது “கோட்டா – பகுதி 2“ ஆகிவிட்டாரா?

அரிசி ஆலை உரிமையாளர்களை அழைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடியிருந்தார். ஆனால், இன்னும் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவின் அதே நாடகத்தை அல்லவா இவரும் அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றார். மக்கள் மீண்டும் ஏமாற்றமடைந்துள்ளனரா? தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசை வலியுறுத்துகிறோம்.” – என்றார்.

# ஹாட்லி அதிபர் கலைச்செல்வனுக்கு பழைய மாணவர் பணி எழில் விழா

யாழ். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் தம்பையா கலைச்செல்வனின் பணி எழில் விழா நாளை சனிக்கிழமை, காலை 9 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர்த.கலைச்செல்வனிடம் கற்ற மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு அவரது முதலாவது அணி மாணவன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கணக்கியற்றுறை சிரேஷ்ட பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.



1994 ஆம் ஆண்டு முதல் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய த.கலைச்செல்வன் 2021 ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பொறுப்பேற்று, கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒருவராக மிளிர்ந்து இன்று வெள்ளிக்கிழமை அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

இவர், ஆசிரியராக, பகுதித் தலைவராக, அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் கல்லூரி மாணவர்களிடையே நற்பண்பண்புகளை வளர்ப்பதிலும், கல்லூரியின் நற்பெயரைக் கட்டிக் காப்பதிலும் அரும் பங்காற்றியவர்.

குறிப்பாக கல்லூரி கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் முன்னிலை வகித்தமைக்கு இவரது பங்கு அளப்பரியதாகும்.

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக கடமையைப் பொறுப்பேற்ற அமைச்சர் சந்திரசேகர்





**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக உத்தியோகபூர்வமாகத் தமது கடமையைப் பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின்நாடாளுமன்றஉறுப்பினர்கருணாநாதன் இளங்குமரன், யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரச அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### யாழ். மாவட்ட...

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போது, அரச அதிகாரிகளால் திட்டங்கள் முன்மொழியப்பட்டு, அவை தொடர்பில் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

அதன்போது இடையில் குறுக்கிட்டு கேள்விகளைக் கேட்ட அர்ச்சுனா எம்.பி., அவர்களின் கல்வித் தகைமைகளையும் கேள்விக்கு உட்படுத்தினார். அதனால் சில அதிகாரிகள் அவரின் கேள்விகளைச் செவிமடுக்காது தமது விளக்கங்களைக் கூறிச் சென்றனர்.

அதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போது,

"அரச அதிகாரிகளைக் கேலி செய்வது போன்றும், அவர்களின் கல்வித் தகைமைகளைக் கேள்விக்கு உட்படுத்துவதும் அவர்களை அவமதிக்கும் செயலாகும். அவர்கள் தொடர்ந்து மக்கள் சேவையில் இருக்கும் அதிகாரிகள். இவ்வாறு செய்யும் சிலரினால் அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகுவதால் மக்கள் சேவைகள் பாதிக்கப்படும்.

அதுமட்டுமின்றி கூட்டங்களில் அரச அதிகாரிகள் அவமதிக்கப்பட்டால் கூட்டங்களை விட்டு அதிகாரிகள் வெளியேறுவார்கள்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகை தரும்போது, அவர்களை நாங்கள் வரவேற்கத் தயாராகவே இருக்கின்றோம். ஆனால், நடைமுறைகளைக் குழப்பி, அத்துமீறி நுழைய முற்பட்டால் கடவுளாக இருந்தாலும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுமதிக்கமாட்டோம்." – என்றார்.

### எந்தத் தரத்தில்...

அதிகமாக இந்த நாட்டு மக்கள் பல்வேறு அரசுகளைத் தெரிவு செய்தனர். பல அரசுகளைக் கவிழ்த்துள்ளனர்.

வரலாற்றில் முதல் தடவையாக இம்முறை நாட்டு மக்கள் இரண்டு சந்தர்ப்பங்களின் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய வரலாற்று மக்கள் ஆணையின் அர்த்தம் மற்றும் நோக்கம் என்னவென்பது தொடர்பிலான ஆழமான சிந்தனை எமக்கு உள்ளது.

தரமான மற்றும் நிலையான நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கையில் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசைத் தேர்ந்தெடுத்தனர்.

அந்தச் சிறப்பான நம்பிக்கை கடுகளவிலும் சிதைந்து போவதற்கு எமது அரசு ஒருபோதும் இடமளிக்காது.

மிகச் சுருக்கமாகச் சொல்வதாயின், நாட்டுக்குள் தவறு செய்கின்ற எவரையும், எந்தக் காரணத்துக்காகவும் பாதுகாப்பதற்கு அரசு தயாரில்லை. நாட்டுக்குள் மட்டுமன்றி எமது அரசினுள் எந்தத் தரத்தில் இருப்பவராயினும் தவறு செய்தால் அதற்கு எதிரான நடவடிக்கையை எடுப்பதற்கு நாம் தயங்கப்போவதில்லை. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய சரியான சந்தர்ப்பத்தில் அதனை மேற்கொள்வதற்கும் நாம் இரு முறை சிந்திக்கப்போவதில்லை.

ஏழு தசாப்தங்களாக ஏமாற்றங்களுக்கு உள்ளான மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாக்கவும், இந்த நாட்டை மிகச் சிறந்த நாடாக மாற்றுவதற்கும் நாம் நிபந்தனைகளின்றி எம்மை அர்ப்பணிக்கின்றோம்." – என்றார்.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார உள்ளிட்ட அரசின் ஊடகப் பிரதானிகள் இதன்போது கலந்துகொண்டனர்.

### குடும்பஸ்தர்...

செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வடமுனை – ஊத்துச்சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வேலு சிவசுப்பிரமணியம் (வயது 48) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.



உயிரிழந்தவரின் மனைவியின் சகோதரரே இந்தக் கொலையைப் புரிந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் வாழைச்சேனை பொலிஸார், கொலையாளியையும், அவரின் மனைவியையும் கைது செய்துள்ளனர்.

### எதிர்ப்புக்களையடுத்து...

விரைவாகச் சமர்ப்பிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனக்கு கலாநிதி பட்டம் வழங்கிய ஜப்பானில் உள்ள பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஆராய்ச்சி நிறுவனத்தால் குறித்த கல்வி ஆவணங்களை சமர்ப்பிக்க முடியும், விரைவில் அவற்றை சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளேன்.

எவ்வாறாயினும், ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அரசு மற்றும் எம் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காக நான் தற்போதைய சபாநாயகர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்." – என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு எதிரணிகள் தீர்மானித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



# ஹிருணிகாவை மேயர் வேட்பாளராக களமிறக்க சஜித் கட்சியினர் திட்டம்?

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்குத் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்படாமை தொடர்பில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. எனினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மேயர் வேட்பாளராக ஹிருணிகாவை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

கடும் இழுபறிக்கு மத்தியில் தேசியப் பட்டியல் பிரச்சினைக்கு ஐக்கிய மக்கள் சக்தி நேற்று தீர்வு கண்டுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணி சிதையாத வகையில் பங்காளிக் கட்சிகளுக்கும் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப் பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்களில், பங்காளிக் கட்சிகளுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய மூன்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிஷாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஆ.மொஹமட் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சுஜீவ சேனசிங்க ஆகியோரின் பெயர்கள், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேசியப் பட்டியல் உறுப்பினராக இதற்கு முன்னர் பெயரிடப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதி அமைச்சர் ஹர்ஷனவின் பெயருக்கு முன்னால் இருந்த 'கலாநிதி' பட்டமும் நீக்கம்

நாடாளுமன்ற இணையத்தளத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் பட்டியலில் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி என எழுதப்பட்டிருந்தமை தவறுலாக இடம்பெற்ற விடயம் என நாடாளுமன்றம் அலுவல்கள் பற்றிய திணைக்களம் கூறியுள்ளது.

அமைச்சர் நாடாளுமன்றத்தில் வழங்கிய தகவல் குறிப்பில் அவரது பெயருக்கு முன்பாக கலாநிதி எனக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவரின் பெயருக்கு முன்னால் கலாநிதி எனக் குறிப்பிடப்பட்டமை உரிய தகவல்களை உள்ளீடு செய்வதில் விடுபட்ட தவறாகும் என்றும் நாடாளுமன்றம் அலுவல்கள் பற்றிய திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடுபட்ட தவறை சரி செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், அனைத்து எம்.பி.க்களினதும் தகவல்கள் மீள மறுபரிசீலனை செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகின்றன என்றும் நாடாளுமன்றம் அலுவல்கள் பற்றிய திணைக்களம் கூறியுள்ளது.





# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்!

யாழ். ஆவரங்கால் பகுதியில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கிருஷ்ணபிள்ளை கஜிந்தவநாதன் (வயது- 41) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இது பரவணிப் பண்பு

எதிர்க்கட்சிகள் தரப்பில் இருக்கும் போது ஆளும் தரப்பைக் கடுமையாக விமர்சித்துத் தாக்கி வீழ்த்துவதற்கு ஊடகங்களைப் பெரிதும் பயன்படுத்தும் அரசியல்வாதிகள், அந்த ஊடக செல்வாக்கைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்ததும், அதே ஊடகங்கள் மீது தமது கெடுபிடியை கட்டவிழ்த்து விடுவது இலங்கையின் அரசியல் சரித்திரமாக தொடர்ந்து நீண்டு வருகிறது.

தீட்டிய மரத்தில் குறி பார்க்கும் இந்த அரசியல் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் அரசியல் சரித்திரமாக நீடிப்பது ஒரு துன்பியல் போக்காகும்.

முன்னைய அரசுகளின் - அதிகாரத் தரப்புகளின் - ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகளை தங்களுடைய பிரசாரத்திற்கான ஆயுதமாக பயன்படுத்தும் அரசியல்வாதிகள், தாங்கள் அதிகாரத்துக்கு வந்ததும் அதே ஊடக முறையை கையில் எடுப்பது இங்கு தொடர்கதையாக நீடிக்கிறது.

1965 தேர்தலில் லேக் ஹவுஸ் நிறுவனத்தை அரசுடைமையாக்கிய ஊடக அடக்குமுறை முக்கிய விவகாரமாகப் பட்டது.

70களில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசு ‘தவஸ’, ‘தினபதி’ - ‘சிந்தாமணி’, ‘சன்’ பத்திரிகைகளை வெளியிட்ட சுயாதீன பத்திரிகை சமாஜத்தை சீல் வைத்து மூடியது மாத்திரமில்லாமல், பல்வேறு கொடூரமான ஊடக அடக்குமுறைகளையும் முன்னெடுத்தது.

அதையே தீவிரமான பிரசாரமாகப் பயன்படுத்தி 1977 இல் அதிகாரத்துக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசும் அதே ஊடக அடக்கு முறையை கடுமையாகத் தொடந்தது. இனவாத யுத்தம் அந்தக் காலகட்டத்தில் வெடித்ததால் அதன் பின்னர் ஊடக அடக்கு முறையில் பெரும் நெருக்கடியை தமிழ் ஊடகங்களே எதிர்கொண்டன.

அதன் பின்னர் பல தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் காணாமலாக்கப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டு, நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டனர். சித்திரவதை செய்யப்பட்டனர். ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன. வடக்குக் கிழக்கில் தமிழ் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான அரச அடாவடிகள் தெற்கில் அதிகாரத் தரப்பினரின் சாதனைகளாக முன்னிறுத்தப்பட்ட போக்கும் கூட இருந்தது என்பதை நாம் மறந்து விட முடியாது. அவை தனியாக நோக்கப்பட வேண்டிய விடயங்கள்.

கொழும்பில் சுதந்திர ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்ஸாவின் படுகொலையோடு ஊடகவியலாளர்களுக்கு எதிரான படுகொலைக் கலாசாரம் தீவிரமானது. இதனால் அவற்றை எதிர்கொள்வதற்காக 1994 அளவில் சுதந்திர ஊடக இயக்கம் பிறந்தது.

ஊடக அடக்குமுறைக்கு எதிரான கருத்துக்களை முன் நிறுத்தி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார் தன்னை சமாதான தேவதை வேடம் தாங்கி முன்னிறுத்திய சந்திரிகா குமாரதுங்க.

பின்னர் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியும் அதே உடல் அடக்கு முறையில் முழுமூச்சாக ஈடுபட்டது. தாஜ்மஹாலை நிர்மாணித்த மொகாலய பேரரசன் ஷாஜகான், அதனைப் போல ஒன்றைப் பிறர் அமைத்து விட இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காக அந்த நினைவு சின்னத்தை வடிவமைத்த கட்டடக்கலை நிபுணர்களின் கைவிரல்களை அறுத்தான் என்ற உதாரணத்தை அப்போதைய எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டினார். ஊடகங்களைப் பயன்படுத்தி அதிகாரத்துக்கு வந்த சந்திரிகா, அதே ஊடகங்களை இன்னொரு தலைவர் பயன்படுத்தி மேலே வந்து விடக்கூடாது என்பதற்காக அந்த ஊடகங்களை ஷாஜகானை போல மோசமாக அடக்குகின்றார் என்று விமர்சித்திருந்தார் ரணில்.

அந்த விடயம் பின்னர் மஹிந்தர், கோட்டாபய, ரணில் ஆகியோரின் தலைமையிலும் கடும் ஊடக அடக்கு முறையாகத் தொடர்ந்தது.

ஊடகங்களை - குறிப்பாக சமூக ஊடகங்களை - வசமாகப் பயன்படுத்தி இப்போது அதிகாரத்துக்கு வந்துள்ள அநுரகுமார திஸநாயக்கவும் இப்போது அதே ஊடகங்களுக்கு - குறிப்பாக சமூக ஊடகங்களுக்கு - எதிராக தமது அடக்கு முறை நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறார் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை இப்படி ஏறிய ஏணியை எட்டி உதைக்கும் மூன்றாம் தர அரசியல் இலங்கையில் பரவணிப் பண்பாகத் தொடர்ந்து வருகிறது.





# கனேடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் திருகோணமலையில் வெள்ள நிவாரணம்

கனேடியத் தமிழர் பேரவை, வடக்கு மற்றும் கிழக்குப் பொருளாதார அபிவிருத்தி மையத்துடன் இணைந்து இலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தென்னமரவடி கிராமத்தில் பாதிக்கப்பட்ட 60 குடும்பங்களுக்கு முக்கியமான வெள்ள நிவாரணப் பொருட்களைக் கடந்த ஞாயிற்றுக் கிழமை வழங்கியிருந்தது.

இந்தக் குடும்பங்களில் சிறு குழந்தைகள், முதியவர்கள் மற்றும் வறுமையுடன் போராடும் குடும்பங்கள் என்பன அடங்கும்.

தென்னமரவாடியில் உள்ள பேரிடர் மேலாண்மை மையக் கட்டடத்தில் உள்ள உள்ளூர் பிரதேச செயலகத்தின் அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு, பால்மா, பயறு, கடலை அடங்கலாக தேவையான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

தென்னமரவடி என்பது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கை இணைக்கும் ஒரு குறிப்பிடத்தக்க எல்லைக் கிராமமாகும். இந்தப் பண்டைய தமிழ் கிராமம் தமிழ் மக்களுக்கு வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது என்பதோடு ஒற்றுமை மற்றும் முயற்சிக்குச் சான்றாக விளங்குகின்றது.

கனேடியத் தமிழர் பேரவை உள்ளூரிலும் உலகளாவிய ரீதியிலும் தமிழ்ச் சமூகத்தின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை ஆதரிப்பதிலும் நிவர்த்தி செய்வதிலும் என்றும் உறுதியாக உள்ளது,














# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்!

யாழ். ஆவரங்கால் பகுதியில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கிருஷ்ணபிள்ளை கஜிந்தவநாதன் (வயது- 41) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# ஊடகத் துறைக்கான "வித்தகர்" விருது!

(எம். எப். றிபாஸ்)

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா திருக்கோணமலை இந்துக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பல்வேறு துறைகளில் ஆளுமை செலுத்திய பலர் அங்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் ஊடகத் துறைக்கான "வித்தகர்" விருதை பிரபல ஒலி, ஒளிபரப் பாளரும், கவிஞருமான எஸ். றபீக் பெற்றுக் கொண்டார்.






# கனடாவில் இருந்து வந்த பார்சலில் போதைப் பொருள்!

## வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் கைது

(கி.வசந்தன்)

கனடாவில் இருந்து கொள்கலன் ஒன்றில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பார்சலில் கஞ்சா அடங்கிய 20 டின்களை இலங்கை சுங்க அதிகாரசபை மீட்டுள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி கப்பலில் வந்த கொள்கலன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், சுங்க அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவை கண்டுபிடிக்கப்பட்டன என்று சுங்க ஊடக செயலாளர் மேலதிக பணிப்பாளர் நாயகம் சிவலி அருக்கொட தெரிவித்தார்.



இந்தப் பொதிகள் வவுனியா மற்றும் களுத்துறை முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. களுத்துறை தெற்கு பகுதியில் உள்ள ஒருவருக்கு வந்த பார்சல் ஒன்றில் 08 டின் கஞ்சா இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த பொதியின் எடை 5,324 கிராமாகும்.

வவுனியாவில் உள்ளவருக்கு வந்த பார்சலின் எடை 1755 கிராம் என போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அறிக்கை தெரிவிக்கிறது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் கையிருப்பு மேலதிக விசாரணை மற்றும் தேவையான சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வவுனியாவில் தேன் எனக் கூறி சீனிப்பாணி விற்ற மூவர் கைது!

(கி.வசந்தன்)

வவுனியாவில் சீனிப் பாணியை தயாரித்து தேன் எனக் கூறி விற்பனை செய்து வந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து பெருமளவான சீனிப்பாணியும் மீட்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா பொதுச் சுகாதார பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்பார்வை சுகாரதார பரிசோதகர் மேஜயாவின் வழிகாட்டலில், நெளுக்களம் பொது சுகாதார பரிசேதகர் சிவரஞ்சன் தலைமையில், ஒமந்தை பொது சுகாதார பரிசேதகர் விதுசன், கந்தபுரம் பொது சுகாதார பரிசேதகர் ஞானபிரஹாஸ், பூவரசங்குளம் பொது சுகாதார பரிசேதகர் கிசோகாந் ஆகிய அணியினர் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் இணைந்து ஊர்மிளாக்கோட்டம் பகுதியிலுள்ள வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த இடங்களில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த 200 போத்தல் சீனிப் பாணி சுகாதாரப் பிரிவினரால் மீட்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூன்று பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, சீனிப் பாணியை தயாரித்து அதற்குள் சிறிதளவு தேனை மாத்திரம் கலந்து ஏ - 9 வீதியின் முறிகண்டிப் பகுதியிலும், நெடுங்கேணி பகுதிகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் இங்கிருந்து அநுராதபுரம், மதவாச்சி ஆகிய பகுதிகளுக்கும் அவை கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இது உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றது. எனவே பொது மக்கள் தேனை கொள்வனவு செய்யும் போது சரியான முறையில் உறுதிப்படுத்தி அவற்றை கொள்வனவு செய்யுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.



# மயக்க மருந்து கொடுத்துத் திருடிய கும்பல் வவுனியா பொலிஸால் கைது

(கி.வசந்தன்)

வடமாகாணத்தில் மயக்க மருந்து கொடுத்து நகைகள் மற்றும் வாகனங்களை திருடும் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப பிரிவு பொலிஸார் இன்று (13) தெரிவித்துள்ளனர்.



நாடு முழுவதும் மயக்க மருந்து கொடுத்து நகைகள் மற்றும் வாகனங்களை திருடும் குழு ஒன்று செயற்பட்டு வருகின்றது. அது போல் வடக்கிலும் அவ்வாறான குழு ஒன்று செயற்பட்டு வந்துள்ளது.

அந்தக் குழு, வவுனியா நகரப் பகுதியில் இருந்து சிவப்பு நிற ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று, சாரதிக்கு மயக்க மருந்தை கொடுத்து அவரை கீழே விழுத்தி விட்டு, ஓட்டோவைக் கொண்டு சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

இது தொடர்பில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்த விஜசேகரவின் ஆலோசனையில், வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மலன் பெரேராவின் வழிநடத்தலில், வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சாரங்க ராஜகுரு, பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்க (37348), ரன்வெல (61518), பொலிஸ் கொன்தாபிள்களான சிந்தக (78448), விதுசன் (91800), சாரதியான திஸதாநாயக்க (18129) ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசேட நடவடிக்கை மேற்கொண்டனர்.

இது தொடாபான விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யபபட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த ஓட்டோவுக்கு நீல நிற வர்ணம் பூசி வாகன இலக்கத் தகடு மாற்றப்பட்டு விற்பனை செய்திருந்மை தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் ஓட்டோ மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வடக்கில் இடம் பெற்ற மேலும் சில குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருந்தமை தெரிய வந்துள்ளது. வவுனியா, உளுக்குளம் பகுதியில் வைத்து ஓட்டோ சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டு அவரது ஒன்றகால் பவுண் மோதிரத்தை திருடிச் சென்றமை தெரிய வந்துள்ளது.

மேலும், மன்னார், அடம்பன் பகுதியில் ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து ஒன்றேகால் பவுண் மோதிரத்தை திருடச் சென்றமை மற்றும் மல்லாவி பகுதியில் டிப்பர் சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கொடுதது 2 பவுண் சங்கிலியை திருடிச் சென்றமை என்பனவும் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, திருடப்பட்ட நகைகள் விற்கப்பட்ட இடத்தில் உருக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இரு நபர்களிடம் இருந்தும் ஓட்டோ மற்றும் 4 அரைப் பவுண் நகை என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பல் ஹற்றன் பகுதியைச் சேர்ந்த 45 வயது நபரும், மன்னார் வங்காலைப் பகுதியைச் சேர்ந்த 47 வயது நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# பெண்களுக்கு எதிரான வன்முறை விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியாவில்

(கி.வசந்தன்)

பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக விழிப் புணர்வு ஊர்வலம் வவுனியாவில் இன்று (13) இடம்பெற்றது.

வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆரம்பித்த இந்தப் பேரணியானது பசார் வீதியூடாக, வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியை அடைந்து பிரதான வீதி ஊடாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தை அடைந்து அங்கு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட பெண்கள் சிவில் சமூக வலையமைப்பும், பொஸ்டோ நிறுவனமும் இணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் 16 நாள் செயல்வாத நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. அதன் ஒரு கட்டமாகவே இந்த விழிப்பு ணர்வு பேரணி இடம்பெற்றது. இதன்போது விழிப்பு ணர்வு பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இடம்பெற்ற அரங்க நிகழ்வின் போது டொமினிக் குடியரசில் சர்வதேச ஆட்சிக்கு எதிராக அரசியலில் நடவடிக்கையில் ஈடுபட்ட 3 சகோதரிகள் 1960 நவம்பர் 25 ஆம் திகதி கொலை



செய்யப்பட்டதன் நினைவாக வெள்ளைப்பட்டி தினமும் அனுஷ்டிக்கப்பட்டது. இது வன்முறை ஒழிப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் அவர்களுக்கான அஞ்சலியும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா பொது வைத்தியசாலை உளநல பிரிவு வைத்தியர் சுதாகரன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பி.எம்.குமார, வவுனியா பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ராகினி, சட்டத்தரணி விதுசினி மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெண்கள் அமைப்புக்களின அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்ந்த ஆறு பேர் கைது!

(க.கிஷாந்தன்)

காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர்வழங்கும் டிக்கோயா ஆற்றுப்பகுதியில், சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, மாணிக்கக் கல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அட்டன் - டிக்கோயா வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு பின்புறம் உள்ள டிக்கோயா ஆற்றுப் பகுதியில் சிலர் சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்கின்றனர் என்று கிடைத்த இரகசிய தகவலை அடுத்து ஹட்டன் பொலிஸார் சுற்றிவளைப்பு மேற்கொண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இரத்தினபுரி, கஹவத்தை, பலாங்கொடை, அட்டன் மற்றும் டிக்கோயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25-40 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள்



ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர் என்றும் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.



# நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி நிலைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்

## ஆதம்பாவா எம்.பி. தெரிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

நிந்தவூரில் அமைந்துள்ள பிராந்திய ஆயுள்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் நிலவி வருகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தெரிவித்துள்ளார்.

இந்த ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று செவ்வாயன்று (10) அங்கு விஜயம் செய்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது இந்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையத்தில் நிலவும் குறைபாடுகளை நேரடியாக கண்டறிந்து கொண்ட அவர் நிலைய உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடினார்.

இங்கு நிரந்தர வைத்திய அதிகாரிகள் எவருமின்றி பதில் வைத்திய அதிகாரிகள் இருவரே கடமையாற்றுகின்றனர். போதிய ஆளணியினர் இல்லை. பௌதீக வளப் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்று அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.


அத்துடன் தனியார் கட்டடத்திலேயே இது இயங்கி வருவதால் இதனை அம்பாறைக்கு கொண்டு செல்வதற்கான முஸ்தீபுகள் இடம்பெறுவதாகவும் கூறப்பட்டது.

அதேவேளை குறித்த கட்டடம் மிகவும் வெப்பமான சூழலைக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வைத்திய நிலையத்தில் நிலவும் மேற்படி குறைபாடுகளால் மக்களுக்குத் திருப்திகரமான சேவைகளை வழங்க முடியாதிருப்பதாகவும் இவற்றை துரிதமாக நிவர்த்தி செய்வதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

நிந்தவூரில் அரச கட்டிடம் ஒன்றை அடையாளப்படுத்தி இந்த நிலையத்தை அங்கு இடமாற்றும்வரை அல்லது நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும்வரை இதனை அம்பாறைக்கோ வேறு பகுதிகளுக்கோ கொண்டு செல்வதற்கு இடமளிக்காமல் தொடர்ந்தும் இங்கேயே இயங்குவதற்கு தான் உடனடி நடவடிக்கை எடுப்பார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா உறுதியளித்தார்.

நிரந்தர வைத்திய அதிகாரிகளை நியமிப்பதற்கும் ஆளணி விடயம் தொடர்பிலும் பௌதீக வளத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் தன்னால் முடியுமான நடவடிக்கைகளை எடுத்து உதவுவார் என்றும் தெரிவித்தார்.



# இந்திய சந்நியாசிகள் காரைதீவுக்கு வந்தனர்

(வி.ரி.சகாதேவராஜா)

இந்தியாவில் இருந்து வருகை தந்த பகவத்கீதையை உலகெலாம் எடுத்துச் செல்லும் கீதா அமிர்தானந்த ஜீ மற்றும் ஐந்து மாதாஜீக்களுக்கு காரைதீவில் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தியா திருநெல்வேலி மதுரை சாரதா ஆச்சிரம சன்னியாசிகளான சண்முக பிரியாம்பா, கதாதர பிரியாம்பா, நீலகண்ட பிரியாம்பா, சதாசிவ ப்ரியாம்பா, துர்கா பிரியாம்பா ஆகிய ஐந்து மாதாஜிகளும் அவருடன் வந்திருந்தார்கள். மேலும் இந்தியா தமிழ்நாட்டுச் சேர்ந்த 20 கீதா இலக்கிய அன்பர்களும் கலந்து கொண்டிருந்தனர். காரைதீவு ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்தில் இவர்களை வரவேற்று விசேட பூஜை இடம் பெற்றது .

அதன் பின்பு அவர்களது ஒன்று கூடல் சந்நிதானத்தில் இடம் பெற்றது .

அங்கு ஆலய தர்மகத்தா இரா. குணசிங்கம் வரவேற்புரை நிகழ்த்த ஆலய தர்மகர்த்தா எஸ்.நமசிவாயம் உள்ளிட்ட ஏனைய ஆலய தலைவர்கள் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இந்திய அணியுடன் வருகை தந்த அமெரிக்காவில் வாழும் சிறுமியின் நடனமும் இடம் பெற்றது.



# பாடசாலைகளின் தேவை தொடர்பில் அஷ்ரப் தாஹிர் எம்.பி. நடவடிக்கை

(எஸ். சினீஸ் கான்)

பாடசாலைகளின் தேவைகள், குறைபாடுகளை அறிந்து நிவர்த்தி செய்யும் நோக்கில் அனைத்து பாடசாலைகளுக்குமான கள விஜயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் முன்னெடுத்து வருகின்றார்.

அந்த வகையில் நிந்தவூர் பதுரியா வித்தியாலம் மற்றும் இமாம் கஸ்ஸாலி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள குறைபாடுகளை கேட்டறிந்தார்.

மாணவர்களின் தேவைகள், குறைபாடுகளை அறிந்து செயலாற்றும் நோக்கில் "குறைகேள் பெட்டி" கையளிக்கப்பட்டிருந்தது.

இதன் போது பதுரியா வித்தியாலயத்தின் அதிபர் மௌலவி ஜெசீர் அலி தலைமையில் பாடசாலைச் சமூகத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினர் மாலை அணிவிக்கப்பட்டு பூச்செறிந்து வரவேற்கபட்டார். ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அதேபோல் இமாம் கஸ்ஸாலி வித்தியாலயத்தின் அதிபர் ஜாபிர் தலைமையில் பாடசாலை மாணவர்களால் பேண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு, மாலை அணிவித்து அஷ்ரப் தாஹிர் எம்.பி. வரவேற்கப்பட்டார்.

இதன்போது உயர்தர பிரிவு மாணவர்களின் வகுப்பறை பௌதீக குறைபாடுகளை நேரடியாக அழைத்துச் சென்று சுட்டிக்காட்டப்பட்டது.

# வாழ்வாதாரத்தை முன்னேற்ற விதைகள் வழங்கி வைப்பு!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு ஊட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வொலிவேரியன் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் முகமாக வீட்டுத் தோட்ட பயிர் செய்கைக்கான விதைகளை வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம் பெற்றது.

சாய்ந்தமருது விவசாயத் திணைக்களம் மற்றும் கல்முனை அக்ரம் பார்ம் ஹவுஸ் நிறுவனத்தின் அனுசரனையுடன் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தொற்றா நோய் தடுப்பு பிரிவு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாத், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மேலும் வீட்டுத் தோட்டத்தினை எவ்வாறு விருத்தி செய்வது தொடர்பான பூரண விளக்கம் விவசாய திணைக்கள உத்தியோகத்தரினால் அப்பகுதி மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.









# றோட்டரிக் கழகம் ஊடாக மக்களுக்கு உதவி வழங்கல்

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகம் ஊடாக அண்மையில் யாழ். மாவட்டத்தில் தேவைப்பாடுடைய குடும்பங்களுக்கு தறப்பாள் மற்றும் உலருணவு உள்ளிட்ட உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்துவின் கரங்கள்-95 அமைப்பின் நிதிப் பங்களிப்பில் அராலியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்குத் தறப்பாள்களும் றோட்டரி மாவட்ட முன்னாள் பிரதிநிதி அப்துல் மற்றும் பவதாரணி ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் அரியாலையைச் சேர்ந்த மக்களுக்கு உலருணவுப் பொருள்களும்வழங்கிவைக்கப்பட்டுள்ளன.





# உலக சதுரங்க சாம்பியன் பட்டம் வென்றார் தமிழக வீரர் குகேஷ்

உலக சதுரங்க சாம்பியன்ஷிப் தொடரில் தமிழக வீரர் குகேஷ், நடப்பு சாம்பியன் டிங் லிரெனை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இதன் மூலம் 18 வயதிலேயே உலக சதுரங்க சாம்பியனாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார்.

இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ், நடப்பு சாம்பியன் சீனாவின் டிங் லிரென் இடையிலான உலக சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வந்தது.

14 சுற்று கொண்ட இந்த போட்டியில் 13 சுற்றுகள் நிறைவடைந்த நிலையில், குகேஷும், லிரெனும் தலா இரு ஆட்டங்களில் வெற்றி பெற்று இருந்தனர்.

மற்றைய அனைத்து ஆட்டங்களும் சமநிலையில் முடிந்தன.

ஆனால் நேற்று நடைபெற்ற 14 ஆவது சுற்றில் அற்புதமாக விளையாடிய குகேஷ் 58 ஆவது நகர்த்தலில் நடப்பு சாம்பியன் டிங் லிரெனை வீழ்த்தினார்.

இதன் மூலம் விஸ்வநாதன் ஆனந்துக்குப் பின்னர் உலக சதுரங்க சாம்பியன்ஷிப் பட்டம் வெல்லும் இராண்டவது தமிழக வீரர் என்ற பெருமையை குகேஷ் பெற்றுள்ளார்.

வெற்றி பெற்றுள்ள குகேஷுக்கு இந்திய மதிப்பில் 20.8 கோடி ரூபா பரிசுத்தொகையாக வழங்கப்படுவதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.



# தனியார் வைத்தியசாலையில் தீப்பரவல்; 6 பேர் உயிரிழப்பு

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர்.

விபத்தினை அடுத்து தனியார் வைத்தியசாலையில் இருந்து குறைந்தது 29 நோயாளிகள் திண்டுக்கல் அரசு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என இந்திய அரசு உயர் அதிகாரி ஒருவர் உறுதிபடுத்தியுள்ளார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நேற்றிரவு 9.00 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினை அடுத்து, திண்டுக்கல் தீயணைப்பு படைவீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.



15 இற்கும் மேற்பட்ட அம்பியூலன்ஸ் வாகனங்கள் அங்கு உதவிக்கு அனுப்பப்பட்டன என கூறப்படுகிறது.

மின்கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக் கட்ட தகவல்கள் கூறும் நிலையில், மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.



# இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பீபிக்கு பிடியாணை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பீபியை கைது செய்ய பாகிஸ்தான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித் துள்ளது.

சட்டவிரோதமான முறையில் அரச சொத்துக்களை அன்பளிப்பாக விற்பனை செய்த குற்றச்சாட்டிற்காகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்ரான் கானை விடுவிக்கக் கோரி கடந்த மாதம் பி.டி.ஐ. கட்சி நடத்திய போராட்டங்களில் புஷ்ரா பீபி முக்கிய பங்கு வகித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெனிசுவேலாவில் போராட்டம் முன்னெடுத்த குற்றச்சாட்டில் கைதான 103 பேர் விடுதலை



வெனிசுவேலா அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த 103 பேர் இந்த வாரம் விடுவிக்கப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெனிசுவேலாவின் ஜனாதிபதித் தேர்தல் கடந்த ஜூலை மாதம் நடாத் தப்பட்டது.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது.

இருப்பினும், ஜனாதிபதித் தேர்தலின் வாக்குப் பதிவுகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் போராட்டங்களின் போது சுமார் 2,000 பேர் கைது செய்யப்பட்டனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# டைம் இதழின் ஆண்டின் சிறந்த நபராக பெயரிடப்பட்டார் டொனால்ட் ட்ரம்ப்




அமெரிக்காவின் பிரபல டைம் இதழானது, ஜனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பை 2024 ஆம் ஆண்டின் சிறந்த நபராக பெயரிட்டுள்ளது.

இதற்கு முன்பு ட்ரம்ப், 2016 இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இந்த கௌரவத்தை பெற்றார்.

2024 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப்பின் வரலாற்று வெற்றி, அடுத்த பதவிக் காலத்தின் போதான மறுசீரமைப்புக் கொள்கைகள் என்பன இந்த ஆண்டின் சிறந்த நபராக ட்ரம்ப்பை தேர்வு செய்வ வழி வகுத்ததாக டைம் இதழின் பிரதம ஆசிரியர் சாம் ஜேக்கப்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

டைம் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில், குடியரசுக் கட்சித் தலைவர் தனது இரண்டாவது பதவிக் காலத்திற்கான சில திட்டங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

நேர்காணலின் போது ட்ரம்ப், தனது தேர்தல் வெற்றி, பொருளாதாரம் மற்றும் உக்ரேன் மற்றும் மத்திய கிழக்கில் உள்ள சூழ்நிலைகள் குறித்து விவாதித்தார்.

மில்லியன் கணக்கான புலம்பெயர்ந்தோரை நாடு கடத்துவது, ஜனவரி 6 கேபிடல் கலவர பிரதிவாதிகளுக்கு மன்னிப்பு வழங்குவது உள்ளிட்ட தனது எதிர்கால திட்டங்கள் தொடர்பில் கூறினார்.

இந்த ஆண்டின் சிறந்த நபர் விருதுக்கு, துணைத் தலைவர் கமலா ஹாரிஸ், வேல்ஸ் இளவரசி மற்றும் டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி எலோன் மஸ்க் உட்பட பத்து பேர் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 13/12/2024

## பாடசாலையில் துப்பாக்கிச் சூடு

கனடாவின் இடோபிகொக் பகுதியில் அமைந்துள்ள பாட சாலையில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனினும் இந்த சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் 02



# டொனால்ட் ட்ரம்பை கையாள்வது சவால் மிக்கது: ட்ரூடோ கருத்து

**அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கையாள்வது சவால் மிக்கது என கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

**கடந்த தடவை அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்ததை விடவும் இம்முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் அவரை கையாள்வது சவால் மிக்கது என அவர் தெரிவித்துள்ளார்.**

கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகள் மீது வரி விதிக்கப் போவதாக அண்மையில் டிரம்ப் அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறான ஒரு பின்னணியில் ட்ரம்பை கையாள்வது தொடர்பில் கனடிய பிரதமர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

டிரம்ப் மற்றும் அவரது குழுவினர் இம்முறை தெளிவான திட்டங்களுடன் களம் இறங்கி இருக்கின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடா மீதான வரி விதிப்பு பொருளாதாரத்தில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்த கூடும் என்றும் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.





# அமெரிக்காவிற்கு வழங்கப்படும் மின்சாரத்தை நிறுத்திவிடுவோம்

## கனடா எச்சரிக்கை

தமது நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு கடுமையான வரி விதிக்கப்படுமானால் அமெரிக்காவிற்கு வழங்கப்படும் மின்சாரத்தை நிறுத்திவிடுவோம் என கனடா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ பிரீமியரான Doug Ford மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் தான் பதவியேற்றவுடன் கையெழுத்திடும் முதல் ஆவணங்களில் ஒன்று, கனடா, மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 சதவிகித வரி விதிப்பது தொடர்பானதுதான் என்று தெரிவித்திருந்த நிலையிலேயே கனடாவின் இந்த எச்சரிக்கை வெளிவந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் 1.5 மில்லியன் வீடுகளுக்கு கனடா மின்சாரம் வழங்கியுள்ளது. அத்துடன், மிச்சிகன், மின்னசோட்டா மற்றும் நியூயோர்க்குக்கு மின்சாரம் ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடு கனடா ஆகும்.

அண்மையில் அமெரிக்க அதிகாரிகளை சந்திப்பதற்காக வோஷிங்டன் டிசிக்கு சென்றிருந்த ஒன்ராறியோ பொருளாதார மேம்பாட்டுத்துறை அமைச்சரான Vic Fedeli, அமெரிக்கா இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெயில் 60 சதவிகிதம் கனடாவிலிருந்துதான் வருகிறது.

ஆக, நீங்கள் இறக்குமதி செய்யும் 60 சதவிகித எண்ணெய்க்கும் 25 சதவிகித வரி விதித்தால், உங்கள் பெட்ரோல் விலை எங்கேயோ போய் விடும் என்று தெரிவித்துள்ளார்.



# ஊழல், மோசடியை மட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு கனடா ஒத்துழைப்பு

ஊழல் மோசடியை மட்டுப்படுத்த தற்போதைய இலங்கையின் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுக் கான கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ஊழல் மற்றும் மோசடியை ஒழிப்பது தொடர்பில் கனடா அரசாங்கத்தின் அனுபவங்களை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் பொருளாதார பின்னடைவுக்கு முன்பு காணப்பட்ட அரசியல் கலாசாரமே காரணம் என சுட்டிக்காட்டிய கனடிய உயர்ஸ்தானிகர், தற்போதைய அரசாங்கம் அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

இலங்கைக்கான கனடிய தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் (அரசியல்) பெட்ரிக் பிகரிங்கும் இதன்போது கலந்துகொண்டார்.







# கனடாவில் ஐந்தாவது தடவையாக குறைக்கப்பட்ட வங்கி வட்டி வீதம்

கனடாவில் வட்டி வீதம் தொடர்பில் மத்திய வங்கி புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.இதனடிப்படையில், ஐந்தாவது தடவையாக மத்திய வங்கி வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 0.5 வீதத்தினால் இவ்வாறு வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டு பகுதியில் ஒரு வீதமாக பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கனடாவில் தொழில் வாய்ப்பு இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

உயர்நிலை பாடசாலையொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதையடுத்து, அனைத்து வகுப்பறைகளையும் மூடி மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யப்பட்டது என பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் மாணவர்கள் கூடைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தனர் எனவும் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக



நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# கனடாவின் ரொறன்ரோவில் இவ்வாண்டில் 81 பேர் கொலை

கனடாவின் ரொறன்ரோவில் இந்த ஆண்டில் இதுவரையில் 81 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ரொறன்ரோவின் கிழக்குப் பகுதியில் 34 வயதான அலிஷா புருக்ஸ் என்ற பெண் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த படுகொலைச் சம்பவம் 81 ஆவது படுகொலைச் சமப்வம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த பெண் மிகவும் கருணையான நல்லெண்ணம் கொண்டவர் என அவரது தாயாரான வெரோனிகா புருக்ஸ் தெரிவித்துள்ளார்.

அலிஸா, இளையோர் மற்றும் அகதிகள் தொடர்பிலான பணிகளில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கறுப்பின இளைஞர்களுக்கு ஆலோசனை வழிகாட்டல்வழங்கும்அறக்கட்டளையொன்றில் அலிஸார் கடமையாற்றியிருந்தார்

இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 33 வயதான அரோன் ஷேயா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



